செ.வெ. எண்:392 நாள்: 09.07.2012

## பத்திரிகை செய்தி

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் அரசாலும், அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் 18 வயதிற்குட்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சிறார்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகள் இல்லங்களில் செயல்படும் பள்ளிகளிலும் இல்லங்களுக்கு வெளியே அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டு கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இக்குழந்தைகள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண ஏதுவாக அவர்களை ஊக்குவிக்க பள்ளி இறுதி தேர்வில் (பத்தாம் வகுப்பு ) தேர்ச்சியடைந்தவர்களுள் மாநில அளவில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணவர் மற்றும் மாணவிகளுக்கு தனித்தனியே ரொக்கப் பணம் பரிசளிக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

இதன்படி கடந்த 2011–2012ம் கல்வியாண்டில் சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் இல்லங்களில் பத்தாம் வகுப்பில் தேர்ச்சியடைந்து மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மாணவியருக்கு தனித்தனியே முதலாம் இடத்திற்கு ரூ.1500/–ம் இரண்டாம் இடத்திற்கு ரூ.1000/–ம் மூன்றாம் இடத்திற்கு ரூ.500/–ம் ரொக்க பரிசினை 04.07.2012 அன்று சமூகப்பாதுகாப்புத்துறை முதன்மை செயலர்/சிறப்பு ஆணையர் திருமதி.மீனாட்சி இராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**